பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 18 | செவ்வாய்க்கிழமை | 03.12.2024 | அதிர்வு 123

## இன்று கூடும் நாடாளுமன்றம்

நாடாளுமன்றம் இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சபா நாயகர் அசோக ரன்வல தலைமையில் கூடுகின்றது.

10ஆவது நாடாளுமன்றத்தின்

05

# சிறீதரன் - கஜேந்திரகுமார் நேரில் சந்திப்பு அரசமைப்பு உருவாக்கம் குறித்து ஆராய்வு





புதிய அரசமைப்பில் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு உள்வாங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும், அதனை இலக்காகக் கொண்டு அடுத்தகட்டமாக முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்கு இடையிலான சிநேகபூர்வ சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

05



# மாகாண சபை முறைமையை நீக்குவதற்கான மக்கள் ஆணை எதுவும் பெறப்படவே இல்லை!

## ரில்வின் சில்வா வெளியிட்டுள்ள சர்ச்சைக்குரிய கருத்துக்கு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர விளக்கத்துடன் பதில்

(கனகராசா சரவணன்)

**“தேசிய மக்கள் சக்தியால் மாகாண சபை முறைமையை நீக்குவதற்கான மக்கள் ஆணை எதுவும் பெறப்படவில்லை. அதற்கான முயற்சியில் தேசிய மக்கள் சக்தி ஈடுபடவும் இல்லை. ஆனால், மாகாண சபையையும் விட ஒரு வலிமையான சபை - அனைத்து மக்களுக்கும் சமனான அந்தஸ்தை வழங்கக்கூடிய கூடிய ஓர் அரசமைப்பு தேவை. அதில் மாகாண சபை இருக்குமா, இல்லையா என்பதே விடயம். எனவே, இதுவரையும் மாகாண சபையை நீக்குவதற்கான எந்தவிதமான முன்மொழிவுகளும் முன்வைக்கப்படவில்லை.”**

**- இவ்வாறு வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சரும் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.**

05




வடக்கு மாகாணத்தில் வெள்ளம் வடிந்தோடாமல் வெள்ள வாய்க்கால்களை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோதக் கட்டடங்களை இடித்து அகற்றுமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பணிப்புரை விடுத்துள்ளார்.

இது ஒரு நல்ல விடயம். ஆனால் நடக்கக் கூடிய விடயமா என்பதுதான் கேள்வி.

வழமையாக சட்டம் அப்பாவிகளுக்கு எதிராக மட்டும்தான் பாயும். மேலிடங்களுக்கு எதிராக அல்ல. பெரும்பாலும் அரசியல் செல்வாக்கு மிக்கவர்களுக்கும் பெரும் தனவந்தர்களுக்கும் எதிரான விடயம் என்றால் சட்டம் தன்பாட்டில் நொண்டத் தொடங்கிவிடும்.

வடக்கு மாகாண ஆளுநர் இப்போது உத்தரவு போட்ட விடயத்திலும் அத்தகையோர்தான் பிரதான வில்லன்களாக இருக்கின்றனர்.

குறிப்பாக யாழ். நகரின் வெள்ளம் வடிந்தோடும் பிரதான இடத்தில் உள்ள வெள்ள வாய்க்கால்களை இரு இடங்களில் இரு பெரும் முதலீட்டாளர்கள் வாய்க்காலை முழுமையாக மூடி வீதி

05

# டிசம்பர் நடுப்பகுதியில் டில்லி பறக்கிறார் அநுர

## முக்கிய சந்திப்புக்களில் பங்கேற்பு



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 16ஆம் திகதி டில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என இராஜ தந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி தகவல் வெளியாகியுள்ளது.

16 மற்றும் 17 ஆம் திகதிகளில் இந்தியாவில் முக்கியத்துவமிக்க சந்திப்புகளில் ஜனாதிபதி ஈடுபடவுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

இந்தியப் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் ஜனாதிபதி பேச்சு நடத்தவுள்ளார் எனவும், வர்த்தக சமூகத்தினருடனும் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோரும் ஜனாதிபதியுடன் டில்லி செல்லவுள்ளனர். மீனவர் பிரச்சினை சம்பந்தமாகவும் சந்திப்புக்களில் கலந்துரையாடப்படவுள்ளது.

# பருத்தித்துறையில் சிலிண்டருக்கு முண்டியடித்த மக்களால் பரபரப்பு



லாப்ஸ் எரிவாயு சிலிண்டரை வாங்குவதற்கு மக்கள் முண்டியடித்ததால் பருத்தித்துறை நகரில் பரபரப்பு ஏற்பட்டது.

லாப்ஸ் எரிவாயு சிலிண்டருக்குத் தட்டுப்பாடு நிலவும் நிலையில், நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நகருக்கு லாப்ஸ் எரிவாயு சிலிண்டருடன் விநியோக வாகனம் சென்றுள்ளது. அதை அவதானித்த மக்கள் உடனடியாக எரிவாயு சிலிண்டர்களுடன் விநியோக முகவர்களின் கடைகளில் குவிந்தனர்.

மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எரிவாயு சிலிண்டர்கள் வந்திருந்த நிலையில், மக்கள் பெருமளவில் குவிந்து முண்டியடித்தால் அவற்றை விநியோகிக்க விற்பனை முகவர்கள் திக்குமுக்காடியதைக் காணமுடிந்தது.

சிலர் வெற்று எரிவாயு சிலிண்டர்களுடன் விநியோக வாகனத்தைப் பின்தொடர்ந்து சென்றதையும் காண முடிந்தது.


# கிராம சேவையாளருடன் முரண்பட்ட இருவருக்கு விளக்கமறியல் உத்தரவு

உணவு வழங்கவில்லை எனக் கிராம சேவையாளருடன் முரண்பட்ட இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை – கற்கோவளம் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைத்திருந்த சில குடும்பங்களுக்கு உணவு வழங்க மறுத்தார் எனக் கிராம சேவையாளருடன் முரண்பட்ட குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இருவர் கைது செய்யப்பட்டனர்.

இருவரிடமும் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், இருவரையும் நேற்று திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.

அதேவேளை, கைது செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள், வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





# திருமலை உவர்மலை பிளாண்டன் பொயின்ற் மக்கள் பாவனைக்கு ஞாயிறு திறக்கப்பட்டது






(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை உவர்மலை வாழை முனை (பிளாண்டன் பொயின்ற் – Plantan point) கீழ் சுற்றுவட்ட வீதி 36 வருடங்களுக்குப் பின்னர் மக்களின் பாவனைக்காக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியர் காலத்தில் திருகோணமலை துறைமுகத்தின் பாதுகாப்பிற்கென இந்த முனைப்பகுதியில் பாரிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. சுதந்திரத்தின் பின்னர் இன்று வரை இந்த இடத்தில் தொடர்ந்தும் இலங்கை இராணுவ முகாம் செயற்பட்டு வருகின்றது.

படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த உவர்மலையின் பின்பகுதியான கீழ் சுற்றுவட்ட வீதி படையினரால் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் உவர்மலை மத்திய வீதியினூடாக செல்கின்ற மக்கள் ஆளுநர் செயலகம் அமைந்துள்ள உவர்மலை கீழ் வீதியினூடாக திரும்பி வரமுடியும். இவ்வீதி 36 வருடங்களுக்குப் பின்னர் மக்களின் பாவனைக்காக திறந்து விடப்பட்டு மக்களின் பயணம் இலகுவாக்கப்பட்டுள்ளது.

இவ்வீதியானது 1988 ஆண்டு காலப்பகுதியில் மூடப்பட்டது. இவ் வீதி மூடப்படும் வரை இதனூடாக பாடசாலை பஸ் சேவை ஒன்று நடைபெற்ற வந்தது. இப்பகுதிக்குச் சென்று திருகோணமலையின் மற்றுமொரு இயற்கை அழகை இரசிக்க முடியும். திருகோணமலை பிறீமா தொழிற்சாலை, டோக்கியோ சீமேந்து தொழிற்சாலை என்பவற்றை இவ்விடத்தில் இருந்து குறுகிய தூரத்தில் பார்வையிடவும் முடியும். மேலும் இப்பகுதியில் உள்ள இராணுவ அருங்காட்சியகத்தையும் பார்வையிடலாம்.

அத்துடன் 22ஆம் படைப்பிரிவு அமைந்துள்ள வீதியூடான சுற்றுவட்ட வீதியை திறப்பதற்கான நடவடிக்கைகளும் இடம்பெற்று வருவதாகவும் படைத் தரப்பில் இருந்து தெரிவிக்கப்படுகின்றது. சுமார் இரண்டு மாதகாலத்திற்குள் அவ்வீதியும் மக்களின் பாவனைக்காக திறக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது திறக்கப்படுமானால் உவர்மலையில் உள்ள அனைத்து வீதிகளினூடாகவும் சுற்றி வருகின்ற வாய்ப்பு மக்களுக்கு கிடைக்கும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற நல்லிணக்க செயற்பாடுகளில் ஒன்றாக இதனையும் காணமுடிகின்றது.

# நுகர்வோர் விவகார அதிகார சபையினால் நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்பு

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்பு மற்றும் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி விசேட வேலைத் திட்டமானது அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும்.

பிரதான மொத்த விற்பனை நிலையங்கள் மற்றும் களஞ்சியசாலைகள் தற்




போது சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

காலாவதியான மற்றும் தகவல்கள் மாற்றப்பட்ட பொருள்கள் சந்தையில் விநியோகிக்கப்படுதல் மற்றும் நுகர்வோருக்கு ஏற்படக் கூடிய அநீதிகளைத் தவிர்ப்பதனைநோக்கமாகக்கொண்டு இந்த திட்டம் முன்னெடுக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

அத்தியாவசியப் பொருள்களுக்கு மேலதிகமாக ஆடைகள், மின்சாதனங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்துமாறு விசாரணை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.



# அரிசி உற்பத்தியாளர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடல்

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிற்கும் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

எதிர்வரும் மாதங்களில் நுகர்வோருக்கு தட்டுப்பாடின்றி நியாயமான விலையில் தொடர்ச்சியாக அரிசி வழங்க வேண்டியதன் அவசியத்தை சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களிடம் எடுத்துரைத்த ஜனாதிபதி, அதற்காக எடுக்க வேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்தும் அவர்களுடன் கலந்துரையாடினார்.



மக்களுக்கு தட்டுப்பாடின்றி அரிசியை வழங்கும் வகையில் நாட்டில் களஞ்சிய வசதிகளை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு, பெறுமதி சேர்க்கும் உற்பத்திகளுக்கு நாட்டு அரிசியை பயன்படுத்துவதால், நுகர்வுக்கு தேவையான இருப்புகளில் தட்டுப்பாடு நிலவுவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

உர மானியத்தை தேசிய உற்பத்திக்கான செயற்திறனுடன் பயன்படுத்தும் நோக்கில் கியூ.ஆர். குறியீட்டு முறைமை அறிமுகப்படுத்துவது தொடர்பிலும் இதன்போது ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

இக்கலந்துரையாடலில் வர்த்தகம், வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு,கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, லக் சதொச தலைவர் கலாநிதி சமித்த பெரேரா மற்றும் சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைத்து, பெரும் கட்டடத்தை அமைத்திருப்பதனால் அப்பாதையால் செல்லும் சுமார் 60 மீற்றர் நீள வாய்கால் இன்னும் உருப்படியாக இருக்கின்றதா, இல்லையா, அடைத்துள்ளதா, அதனைத் துப்பரவு செய்ய முடியுமா என்ற முடிவை எடுக்க முடியாமல் மாநகர சபை பத்து வருடங்களாகத் தவிப்பதாகத் தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

இபோதைய ஆளுநரின் சீற்றத்தால் எங்கே இது சீர் செய்யப்படுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

இரண்டாவது – அரச திணைக்களமான வீதி அபிவிருத்தி அதகார சபையின் திருவிளையாடல். கட்டுவன் – மயிலிட்டி வீதியில் 400 மீற்றர் தூரத்தை இராணுவம் ஆக்கிரமித்து நின்றபோது, அதை ஒதுக்கி, இரகசியமாக மக்கள் காணிகளையும் அதன் அருகே இருந்த பெரிய வெள்ள வாய்க்காலையும் ஆக்கிரமித்தே வீதி அமைத்தனர். தற்போது வெள்ளம் தனியார் காணிகளால் பாய்கின்றது. அந்தத் தனியார் மதில் அமைத்தால் வெள்ளம் எப்படி, எந்த வழியால் பாயும் என்பது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குத்தான் வெளிச்சம்.

இதேபோன்று யாழ். நகரில் ஸ்ரான்லி வீதி மற்றும் கஸ்தூரியார் வீதி இணைவுப் பிரதேசத்திலும், மானிப்பாய் வீதியிலும் என இரண்டு இடங்களில் அரசியல் செல்வாக்கிலும் அதிகார செல்வாக்கிலும் வெள்ள வாய்க்கால்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலைக்குள் வெள்ளம் அடிக்கடி உட்புகுவது தொடர்பில் விசாரித்தால் 'கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக' புது விடயங்கள் வெளிப்படுகின்றன.

போரிற்குப் பின்னர் போதனா வைத்தியசாலைக்குள் பத்துக்கும் மேற்பட்ட கட்டடங்கள் அரச நிதியில் கட்டி முடிக்கப்பட்டபோதும் அவை அனைத்துமே அனுமதியற்ற கட்டடங்கள் என்கின்றது மாநகர சபை. வைத்தியசாலைதான் அப்படி என்றால், மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள் கூட சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் அனுமதி பெறாத கட்டடங்களாகவே உள்ளன.

இப்படி உள்ளூராட்சி சபைகளைக் கிள்ளுக் கீரையாக நினைத்து, புறம் ஒதுக்கி, அரச திணைக்களங்களும், அரசியல் செல்வாக்காளர்களும், அதிகார வர்க்கத்தினரும் கட்டடங்களைக் கட்டிக் கொண்டிருந்தால், வெள்ளம் வடிதல், நிலத்தடி நீரைச் சேமித்தல் போன்ற விடயங்களுக்கு உள்ளூராட்சி சபைகள் மற்றும் அமைப்புகள் எப்படிப் பொறுப்பேற்க முடியும்? பதில் கூற முடியும்?

யாழ். மாநகர சபை எல்லைக்குள் மட்டும் சபையின் பொறுப்பில் 44 குளங்கள் உள்ளன என்று கூறப்படுகின்றது. ஆனால், நாளொரு வண்ணமும் பொழுதொரு கோலமுமாக இந்தக் குளங்கள் சுருங்கி, மெலிந்து வருகின்றன. குளத்தை நிரவி ஆக்கிரமிப்பு தாராளமாக நடக்கின்றது.

அப்படிச் செய்தால் மழை வெள்ளம் குடியிருப்பில்தானே தேங்கும்?

ஆக, மொத்தத்தில் அனுமதியற்ற கட்டடங்கள், சுவர்கள், ஆக்கிரமிப்புகளுக்கு இடமில்லை என்று தீர்க்கமான முடிவு எடுத்து, முதலில் பெரும் முதலைகளை மடக்கினால் சிறிய ஆக்கிரமிப்பாளர்கள் தானாக ஓட்டம் பிடிப்பார்கள்.

ஆளுநரின் திட்டம் நல்ல முயற்சி. ஆனால், நடைமுறைப்படுத்துவது எங்ஙனம்? பூனைக்கு யார் மணி கட்டுவது என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

## சிறீதரன் - கஜேந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அண்மையில் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தல் முடிவுகளை அடுத்து, இனிவரும் காலங்களிலேனும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி ஒன்றுபட்டுப் பயணிக்க வேண்டும் என்ற விடயம் பல்வேறு தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

அதன்படி தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்ட முன்மொழிவை அடிப்படையாகக்கொண்டு ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேச்சுகளை நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாக அண்மையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.

அதேவேளை இதுபற்றிக் கருத்து வெளியிட்டிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இந்தத் தீர்வுத் திட்ட முன்மொழிவு குறித்தும், அதற்கு அப்பாலும் பேச்சு நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இது பற்றிக் கலந்துரையாடும் நோக்கில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சிநேகபூர்வ சந்திப்பு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் சிறீதரனின் இல்லத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரனும் கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது அரசால் கொண்டுவரப்படும் புதிய அரசமைப்பில் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு உள்வாங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும், அதனை இலக்காகக் கொண்டு அடுத்தகட்டமாக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இரு தரப்பினரும் ஆராய்ந்தனர்.

அதேபோன்று தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தைக் கஜேந்திரகுமார், சிறீதரனிடம் கையளித்தார். அத்தோடு ரொமேஷ் டி சில்வா தலைமையிலான குழுவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் பற்றி இதன்போது சிறீதரன் எடுத்துரைத்தார்.

அத்தோடு தமிழர்களுக்கான தீர்வு விடயத்தை ஒரு பொது வேலைத்திட்டத்தின் ஊடாக அணுக வேண்டும் என்ற கொள்கை ரீதியான நிலைப்பாடு தொடர்பில் இங்கு இரு தரப்பினரும் தமது இணக்கத்தை வெளிப்படுத்தினர்.

## இன்று கூடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆரம்ப அமர்வு நவம்பர் 21 ஆம் திகதி நடைபெற்றது. அன்றையதினம் சபாநாயகர் தெரிவு, பிரதி சபாநாயகர் தெரிவு, குழுக்களின் பிரதி தவிசாளர் தெரிவு, நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறுதியேற்பு என்பன இடம்பெற்றன.

அதன்பின்னர் சபை ஒத்திவைக்கப்பட்ட பிறகு ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை இடம்பெற்றது. எனவே, இன்று முதலே நாடாளுமன்றத்தில் வழமையான நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

அந்தவகையில் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீது இன்று முற்பகல் 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை விவாதம் இடம்பெறவுள்ளது.

நாளையும் குறித்த விவகாரம் தொடர்பிலேயே முற்பகல் 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை விவாதம் இடம்பெறவுள்ளது.

டிசம்பர் 5 ஆம் திகதி இடைக்கால கணக்கறிக்கை முன்வைக்கப்படவுள்ளது. 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் அது தொடர்பில் விவாதம் நடத்தப்படவுள்ளது.

## மாகாண சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஜஸ்டினா முரளிதரனின் ஒருங்கிணைப்பில் மாவட்ட செயலக மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை அனர்த்த முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கந்தசாமி பிரபு, இராசமாணிக்கம் சாணக்கியன், ஞானமுத்து ஸ்ரீநேசன், வைத்தியர் இளையதம்பி ஸ்ரீநாத், கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, முஹம்மட் சாலி நளீம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரான பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"இங்கு பல்வேறுபட்ட விடயங்கள் பேசப்பட்டன. அதற்கு ஆக்கபூர்வமான பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அனர்தம் தொடர்பாக சகல இடங்களில் இன்னும் முன்னெச்சரிக்கையுடன் செயற்பட்டிருக்கலாம் என்ற பல்வேறுபட்ட விமர்சனங்கள் இடம்பெற்றிருந்தாலும் ஆக்கபூர்வமாகச் செயற்பட்ட அதிகாரிகளுக்கு நன்றி.

இனிவரும் காலத்தில் இன்னும் எங்களைத் தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. அதனை உணர்ந்து செய்ய வேண்டிய கடமை இருக்கின்றது. இருந்த போதும் கடந்த காலத்தில் முன்வைக்கப்பட்டிருந்த முறைசாராத அபிவிருத்திகள் இந்த அனர்த்தத்துக்கு ஒரு முக்கியமான காரணியாகும்.

எனவே, இது தொடர்பாக நிரந்தரமான தீர்வை நோக்கிப் போக வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். இனிவரும் காலங்களில் அபிவிருத்தி மக்கள் நலன் சார்ந்ததாக இருக்க வேண்டுமே தவிர, அபிவிருத்திப் பணிகள்

எந்தவகையிலும் அன்றாட வாழ்க்கைக்குப் பாதகங்களை ஏற்படுத்தக் கூடியவையாக இருக்க முடியாது.

அபிவிருத்தி நடவடிக்கைகளால் அன்றாட வாழ்கைக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றால் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வோம். அதுமாத்திரம் அல்ல, இங்கு சட்ட விரோதமான – விதிமுறைக்கும் அப்பாற்பட்ட – மணல் அகழ்வு தொடர்பாகப் பேசப்பட்டுள்ளது. இது தொடர்பாக சில மாதங்களுக்கு முன்னர் நடவடிக்கை எடுக்கக் கோரியிருந்தாலும் சில அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை என்ற விமர்சனமும் பரவலாக

06



# எம்.பிக்களுக்கு வழங்கப்படும் விசேட சலுகைக்கான மீள்பரிசீலனை அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு



நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் விசேட சலுகைகளை மீள்பரிசீலனை செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து இந்த அறிக்கை கையளிக்கப் பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் விசேட சலுகைகள் தொடர்பில் மீள்பரிசீலனை செய்வதற்காக உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் கே.டி. சித்ரசிறி தலைமையில் குழுவொன்று அண் மையில் நியமிக்கப்பட்டது.

இதற்கமைய, இந்தக் குழுவின் அறிக்கை நேற்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிடம் கையளிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# ஐ.ம.ச. பிரதான அமைப்பாளராக கயந்த கருணாதிலக்க நியமனம்



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணா திலக்க எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள் ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வெகுஜன ஊடக அமைச்சராகவும் ஆளும் கட்சியின் பிரதம அமைப் பாளராகவும் பணியாற்றினார்.

அத்துடன், அமைச்சரவை ஊடகப் பேச்சாளராகவும் அவர் பணி யாற்றியுள்ளார். கயந்த கருணாதிலக்க 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன் றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

## மாகாண சபை...

(5ஆம் தொடர்ச்சி..)

முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே, உயர் அதிகாரிகளைக் கொண்டு தீர்க்கமான நட வடிக்கை எடுத்துள்ளோம். எதிர்வரும் காலங்களிலும் விதி முறைக்கு முரணாக மண் அகழ்வுகள் இடம்பெறுமாயின் இது தொடர்பான முறைப்பாடுகளை முன்வைக்குமாறு கேட்டுள்ளோம்.

இந்த அனர்த்தங்கள் மூலமாக கூட சரியான பாடங்களை கற்றுக்கொள்ளாவிட்டால் இது ஒரு பரவலான பாதிப்புக்கு வழியமைக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. எனவே, இந்த விடயம் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய அதி காரிகள் இன்னும் பொறுப்புடன் செயற்பட வேண்டிய கட்டா யத்தில் இருக்கின்றனர்.

வைத்தியசாலைகள், அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டவர்க ளின் நஷ்டஈடுகள், விவசாய நிலங்கள் தொடர்பான சரியான மதிப்பீடுகள் உட்பட பல்வேறு தரப்பட்ட விடயங்கள் இந்தக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன.

தீர்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தீர்வுகள் எட்டப்படாத விடயங்கள் தொடர்பாக அமைச்சு மட்டத்தில் தீர்வுகளை எட்டுவதற்காக எமது தலையீடு இருக்கும்.

1978 அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக ரில்வின் சில்வா கருத்துத் தெரிவித் துள்ளார். அதாவது இந்த அரசமைப்பை மாற்ற வேண்டிய தேவை இருக்கின்றது என்று அவர் கூறியுள்ளார். மாகாண சபை முறைமையை நீக்குவதற்கான மக்கள் ஆணை எதுவும் பெறப்படவில்லை. இதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அவர் அதில் குறிப்பிட்ட விடயம் இந்த மாகாண சபை அலகு போதியதல்ல, எனவே, இந்த விடயத்தில் ஒரு தீர்வை நோக்கிப் போக வேண்டும்.

அது மாத்திரமல்ல, புதிய அரசியல் யாப்பை முன்வைக் கும்போது 13 ஆம் திருத்தச் சட்டம் அல்ல முதலாவது திருத்தம் தொடக்கம் 20 வரையிலான திருத்தங்கள் மாற்றப்பட்டு ஒரு புதிய அரசியல் அமைப்பு முன்வைக்கப்படவுள்ளது.

இந்த விடயம் பிழையாகப் புரிந்துகொள்ளப்பட்ட விடயமாக நாங்கள் பார்க்கின்றோம். ஆகவே, தேசிய மக்கள் சக்தி யால் மாகாண சபை முறைமையை நீக்குவதற்கான மக்கள் ஆணை எதுவும் பெறப்படவில்லை. அதற்கான முயற்சியில் தேசிய மக்கள் சக்தி ஈடுபடவும் இல்லை. ஆனால், மாகாண சபையையும் விட ஒரு வலிமையான சபை – அனைத்து மக்களுக்கும் சமனான அந்தஸ்தை வழங்கக்கூடிய கூடிய ஓர் அரசமைப்பு தேவை. அதில் மாகாண சபை இருக்குமா, இல்லையா என்பதே விடயம். எனவே, இதுவரையும் மாகாண சபையை நீக்குவதற்கான எந்தவிதமான முன்மொழிவுகளும் முன்வைக்கப்படவில்லை." – என்றார்.

இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர்களான சுதர்ஷனி சிறிகாந்த், நவரூபரஞ்சனி முகுந்தன் (காணி), மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பா ளர் ஏ.எஸ்.எம்.சியாத், மத்திய மற்றும் மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், ஆணையாளர்கள், மாவட்ட செயலக அதிகா ரிகள், பிராந்திய சுகாதார சேவைகள் அதிகாரிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், மீன்பிடி, விவசாயத் திணைக்கள அதிகாரிகள், வீதி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர் கள் மற்றும் துறைசார் திணைக்களங்களின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.




# ஈழத்து கலைஞர்களை ஊக்குவிப்பதன் மூலமே கலைஞர்கள் அடுத்த நிலைக்கு செல்ல முடியும்

## இயக்குனர் செல்வராசா தனுசன் தெரிவிப்பு

(பா.சதீசன்)

ஈழத்து கலைஞர்களை ஊக்குவிப்பதன் மூலமே கலைஞர்கள் அடுத்த நிலைக்கு செல்ல முடியும் என ஈழத்து குறுந்திரைப்பட இயக்குனர் செல்வராசா தனுசன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தோல்வி நிலையென நினைத்தால் எனும் குறும்திரைப்படம் ஒன்றினை தயாரித்து ஈகிள் ஸ்ரூடியோ (Eagle studio) எனும் யூரியூப் தளத்தில் நேற்றையதினம் மாலை வெளியிட்டிருக்கின்றோம். அதனை நீங்கள் பார்க்க முடியும்.

இக் குறும் திரைப்படத்தில் அதிக ஈழத்து கலைஞர்கள் நடித்திருக்கிறார்கள். அதிலும் ஈழத்தில் பிரசித்திபெற்ற நடிகர்களும் இணைந்து நடித்திருக்கிறார்கள்

ஈழத்தில் வெளியிடும் திரைப்படம் ஆகையால் எமது ஈழத்து கலைஞர்களை அனைவரும் பார்த்து ஊக்கிவிக்க வேண்டும். ஊக்குவிப்பதன் மூலமே கலைஞர்கள் அடுத்த கட்ட முழுநீள திரைப்படம் நோக்கி நகர முடியும்.

இந்த படத்தினை அனைவரும் பாருங்கள் உங்களுக்கு பிடித்திருந்தால் எமக்கு முழு ஆதரவை தாருங்கள். தொடர்ந்து நாம் ஈழத்து சினிமாவை வளர்ப்பதற்கு தயாராக இருக்கின்றோம் .

மக்கள் அனைவரும் இந்த குறும்படத்தினை பார்த்து உங்கள் விமர்சனங்களை கூறவேண்டும் . அது தான் எமது அடுத்த கட்ட நகர்வுக்கு உறுதுணையாக இருக்கும்."– என்றார்.

சதீஸ்கரனின் தயாரிப்பிலும் செல்வராசா தனுசனின் இயக்கத்திலும், விக்னேஸ்வரன் மற்றும் எஸ்.ஜே.லைபனின் துணை இயக்கத்திலும் இந்த குறுந்திரைப்படம் வெளிவந்துள்ளது.










# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பாலியல், பாலின வன்முறை

இலங்கையில் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை தொடர்பான அதிர்ச்சிகரமான புள்ளி விவரங்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை உட்பட ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளில் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளே இந்த சிக்கலான பெறுபேறுகளை - புள்ளிவிவரங்களை - வெளிப்படுத்தியுள்ளன.

ஆய்வில் பங்குபற்றிய அல்லது கணக்கெடுக்கப்பட்ட ஆண்களில் ஏறக்குறைய பாதிப் பேர் ஒரு பெண்ணுக்கு எதிராக உடல் அல்லது பாலியல் வன்முறையைத் தாங்கள் பிரயோகித்தமையை ஒப்புக் கொண்டுள்ளனர்.

மேலும் இருபத்தியைந்து வீதமானோர் தங்களின் பாலியல் பலாத்காரச் செயலுக்குத் தாங்கள் சட்ட ரீதியான விளைவுகளை எதிர்கொள்ளவேயில்லை என்பதை ஒப்புக் கொண்டிருக்கின்றனர்.

இவ்விடயத்தில் ஓர் அற்ப சதவீத வழக்குகள் மட்டுமே அதிகாரிகளிடம் பதிவாகியுள்ளன.

இந்த ஆய்வு பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையைச் சுற்றி ஆழமாக வேரூன்றியுள்ள மோசமான சூழலையும் நீதி அமைப்பில் நம்பிக்கையின்மையையும் அடிக்கோடிட்டுக் காட்டுவதாக நீதித் துறையினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த ஆபத்தான புள்ளிவிவரப் பெறுபேறுகள் தந்துள்ள சமூக அச்சங்களுக்கு விடையிறுக்கும் வகையில், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் ஆகியவை இலங்கையில் 'பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதை செயல்படுத்தும்' திட்டங்களுக்கு உதவ முன்வந்துள்ளன. அது தொடர்பான திட்டங்களுக்கு கனடா அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்டது.

நீதித்துறை அணுகுமுறையை பின்பற்றுவதன் மூலம் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளுக்குத் தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ள இந்தத் திட்டச் செயற்பாட்டின் இறுதி இலக்கு, இது போன்ற வன்முறைகள் இல்லாத சமூகத்தை உருவாக்குவது எனக் கூறப்பட்டது.

அதன் ஒரு கட்டமாக, இத்தகைய வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களுக்கு நீதிக்கான அணுகலை மேம்படுத்துவதற்கான நீதித்துறை தலையீடுகள் குறித்த பிராந்திய அறிவுப் பரிமாற்றத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த 22 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நீர்கொழும்பில் இந்நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் இலங்கையின் பிரதம நீதியரசர் உட்பட நீதித்துறையின் பல்வேறு அடுக்குகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐம்பது நீதிபதிகள் கலந்துகொண்டனர்.

இது தெற்காசியாவைச் சேர்ந்த நீதித்துறை நிபுணர்களுக்கு புதுமையான அணுகுமுறைகளைப் பகிர்ந்து கொள்ளவும், இத்தகைய வன்முறைகளில் உயிர் பிழைத்தவர்களுக்கு நீதிக்கான அணுகலை மேம்படுத்துவதில் உள்ள சவால்களைப் பற்றி விவாதிக்கவும் ஒரு தளத்தை வழங்கியது.

தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள நான்கு நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நீதிபதிகள் ஒன்றிணைந்து, இலங்கையில் இத்தகைய வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் நீதித்துறை சீர்திருத்தங்களை மேற்கொள்வதை ஒரே மார்க்கமாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

இந்த நீதித்துறைச் சீர்திருத்தங்கள் எப்போது இலங்கையில் அறிமுகப்படுத்தப்படும், நடைமுறைப்படுத்தப்படும் என்பவை தெரியவில்லை. அப்படி வந்தாலும் இந்த சமூகப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டுமா என்பவை எல்லாம் கேள்விக்குறியே.







# புயல், மழையால் 12 பேர் உயிரிழப்பு; 2,000 கோடி ரூபா கோரும் தமிழக அரசு

தமிழகத்தில் ஃபெங்கல் புயலால் சேதமடைந்த உள் கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரத்தை தற்காலிகமாக சீர மைக்க, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடி யாக 2 ஆயிரம் கோடி ரூபா நிதியை இடைக்கால நிவாரண மாக விடுவித்திடுமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அதில், இந்தப் பேரழிவின் காரணமாக, 12 உயிரிழப்புகளும், 2,416 குடிசைகள், 721 வீடுகள் மற்றும் 963 கால்நடைகள் இழப்புகளும் ஏற்பட்டுள்ளதோடு, 2,11,139 ஹெக்டேர் பரப்பளவிற்கு விவசாய மற்றும் தோட்டக்கலை நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில்,

“ஃபெங்கல் புயல் நவம்பர் .23 ஆம் திகதி குறைந்த தாழ்வழுத்தப் பகுதியாக உருவெடுத்து, தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களில் வரலாறு காணாத பேரழிவை ஏற்படுத்தி யுள்ளது. தொடக்கத்தில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டி னம், மயிலாடுதுறை மாவட்டங்களில் கனமழை பெய்ததைத் தொடர்ந்து, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங் கல்பட்டு, விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் மிக கன மழை பெய்தது.

டிசம்பர் 1 ஆம் திகதி ஃபெங்கல் புயல் கரையைக் கடந்த போது, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மற்றும் திருவண்ணா மலை மாவட்டங்களில் காற்றின் வேகம் மணிக்கு 90 கிலோ மீற்றர் வேகத்தைத் தொட்டதால், வீதிகள் மற்றும் மின் இணைப்புகள் கடுமையாக சேதமடைந்தன. தருமபுரி, கிருஷ்ணகிரி, ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர் உள்ளிட்ட உள்மாவட்டங்களில் கனமழையால் சேதம் ஏற்பட்டுள் ளது.

இந்தப் புயல் மழையினால் ஏற்பட்ட வெள்ளம் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் உள்கட்ட மைப்பு மற்றும் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பேரிடரால் மொத்தம் 69 லட்சம் குடும்பங்களும், 1.5 கோடி பேரும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப் பாக, விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் கள்ளக் குறிச்சி மாவட்டங்களில் ஒரு முழு பருவத்தின் சராசரிக்கு ஒரே நாளில் மழை பெய்துள்ளது. இதன் விளைவாக பரவலான வெள்ளம் மற்றும் உள்கட்டமைப்பு மற்றும் பயிர்களுக்கு கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையை எதிர்கொள்ளும் வகையில், தமிழக அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிக்க, அனைத்து ஆதாரங்களையும் திரட்டியுள்ளோம். பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரண நடவ டிக்கைகளை மேற்பார்வையிட மூத்த அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரத்தில் 9 தேசிய பேரிடர் மேலாண்மைக் குழு வினரும், 9 மாநில பேரிடர் மேலாண்மைக் குழுவினரும் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதோடு, 38,000 அரசு அலுவலர்கள் மற்றும் 1,12,000 பயிற்சி பெற்ற முதலுதவிப் பணியாளர்கள் அடங்கிய அர்ப்பணிப்புடன் கூடிய பணி யாளர்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

# கன்னட நடிகை சோபிதா சிவன்னா மர்மமான முறையில் உயிரிழப்பு

கன்னட நடிகை சோபிதா சிவன்னா ஐதராபாத்தில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் மர்மமான முறையில் உயிரிழந் துள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவர் கர்நாடக மாநிலம் – ஹாசன் மாவட்டத்தில் உள்ள சக்லேஷ்பூர் பகுதியைச் சேர்ந்தவர்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு இவருக்குத் திருமணம் ஆனது.

திருமணத்திற்குப் பின்னர் சோபிதா சிவன்னா ஐதரா பாத்தில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் வீட்டில் வசித்து வந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு மர்மான முறை யில் நடிகை சோபிதா உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப் படுகின்றது.

இதுகுறித்து தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து , அவரது உடலை மீட்டு காந்தி மருத்துவமனையில்





பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

சோபிதாவின் மரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வரும் நிலையில், இரசிகர்கள் மற்றும் திரைத்துறை யினர் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.







# காசாவில் இஸ்ரேலின் தாக்குதலில் 15 பேர் பலி

இஸ்ரேலிய இராணுவம் காசாவின் வடக்கு பகுதியில் மேற்கொண்ட தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பெய்ட லஹியா நகரில் உள்ள கட்டம் ஒன்றில் தங்கி இருந்தவர்களே கொல்லப்பட்டுள்ளனர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் பலர் காயமடைந்துள்ள நிலையில் அவர்களுக்கு அவசர சிகிச்சை அளிப்பதில் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலிய இராணுவம் இந்தப் பிரதேசத்தைக் குறி வைத்துக் கடந்த சில வாரங்களாகத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.

மக்களை வெளியேற்றும் நோக்கில் தொடர்ந்தும் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், இந்த குற்றச்சாட்டுகளை இஸ்ரேலிய இராணுவம் மறுத்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.




# மகனுக்கு பொது மன்னிப்பு வழங்கினார் ஜோ பைடன்

சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்தமை மற்றும் வரி ஏய்ப்பு செய்தமை தொடர்பான குற்றச்சாட்டுகளில் ஜனாதிபதி ஜோ பைடனின் மகன் ஹன்டர் பைடனை குற்றவாளியாக அமெரிக்க நீதிமன்றம் அறிவித்தது.

ஜனாதிபதி பைடன் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி மகனை விடுவித்து விடுவாரா? என்ற கேள்வி எழுந்த நிலையில், அவருக்கு பைடன் பொது மன்னிப்பு வழங்க மாட்டார் என்று வெள்ளை மாளிகை கூறியிருந்தது.

இந்தநிலையில், தனது மகன் ஹன்டர் பைடனுக்கு பொது மன்னிப்பு கொடுக்கும் ஆவணங்களில் ஜனாதிபதி பைடன் கையெழுத்திட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஜோ பைடன் கருத்து தெரிவிக்கையில்,

“இன்று எனது மகன் ஹன்டர் பைடனுக்கு பொது மன்னிப்பு வழங்கும் ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளேன்.

நான் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றது முதல் நீதித் துறையில் தலையிட மாட்டேன் என்று கூறியபடி இருந்து வருகிறேன்.

வீண் பழி சுமத்தி என் மகனை சிறையில் அடைத்த போதும், நான் தலையிடவில்லை. அரசியல் காழ்ப்புணர்ச்சி



காரணமாகவே, என் மகனுக்கு அநீதி இழைக்கப்பட்டது.

நான் தற்போது அவருக்கு பொது மன்னிப்பு வழங்கியுள்ளேன்.”–என்றார்.

நடைபெற்று முடிந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பைடனின் கட்சி தோல்வியடைந்தது.

ஜனாதிபதி பைடன் ஜனவரி 14ஆம் திகதி வரையில் மட்டுமே ஜனாதிபதியாக இருக்க முடியும் என்ற சூழலில், தனது மகனுக்கு அதிகாரத்தைப் பயன்படுத்தி பொது மன்னிப்பு வழங்கியுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# இந்திய உயர்ஸ்தானிகர் சபாநாயகருடன் சந்திப்பு

சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியா இடையிலான நீண்டகால உறவுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார, வர்த்தக விவகாரங்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவு பரிமாற்றம் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.



இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களுக்கான கருத்து பரிமாற்ற நிகழ்வுகளை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார் என நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# அஸ்வெசும நிவாரண கொடுப்பனவு தொடர்பில் அரசாங்கம் மீது கிராம சேவகர்கள் குற்றச்சாட்டு

அஸ்வெசும நிவாரணக் கொடுப்பனவு தொடர்பாக முன்னாள் அரசாங்கம் கடைப்பிடித்த வினைத்திறன் இல்லாத நடைமுறையையே தற்போதைய அரசாங்கமும் கடைப்பிடித்து வருவதாகக் கிராம சேவகர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதுதொடர்பாக அந்தச் சங்கத்தினால் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நிவாரணக் கொடுப்பனவுக்கான பயனாளிகள் தெரிவின் போது, பிழையில்லாத பொறிமுறை ஒன்றைப் பின்பற்றுமாறு அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.



அஸ்வெசும கொடுப்பனவு சம்பந்தமான செயற்பாடுகளிலிருந்து கிராம சேவகர்கள் கடந்த மே மாதம் 7 ஆம் திகதிக்குப் பின்னர் விலகிக் கொண்டனர்.

இதனை அடுத்து அந்தப் பணிகள் தற்போது அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

# பெண்கள், சிறுவர் விவகார அமைச்சின் செயலாளராக கே.டி.ஆர். ஒல்கா நியமனம்

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளராக கே.டி.ஆர். ஒல்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுகுமார திஸ நாயக்கவினால் இந்த நியம னம் வழங்கப்பட்டுள்ளது.

நியமனக் கடிதத்தை ஜனாதி பதியின் செயலாளர், கலாநிதி நந் திக சனத் குமாநாயக்கஜனாதி பதி அலுவலகத்தில் கே.டி.ஆர். ஒல்கா விடம் கையளித்தார்.



# புதிய பிரதம நீதியரசர் சத்தியப்பிரமாணம்



இலங்கையின் புதிய பிரதம நீதியரச ராக முர்து நிரூபா பிந்துஷினி பெர் னாண்டோ ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

அதற்கமைய நாட்டின் பிரதம நீதி யரசராக நியமிக்கப்பட்ட இரண்டாவது பெண்ணாகவும் இலங்கையின் 48 ஆவது பிரதம நீதியரசராகவும் முர்து பெர் னாண்டோ வரலாற்றில் இடம்பிடித் துள்ளார்.

பிரதம நீதியரசராக செயற்பட்ட ஜயந்த ஜயசூரிய ஓய்வு பெற்றதன் பின் னர் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு முர்து பெர் னாண்டோவின் பெயர் அரசமைப்பு பேரவையால் அண்மையில் அங்கீ கரிக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டில் சட்ட மா அதி பர் திணைக்களத்தில் இணைந்து கொண்ட அவர், 1997ஆம் ஆண்டில் பிரதி சொலிசிட்டர் ஜெனரலாகவும் 2014ஆம் ஆண்டில் மேலதிக சொலிசிட் டர் ஜெனரலாகவும் பதவியுயர்வு பெற்றுக் கொண்டார்.

முர்து பெர்னாண்டோ அரச சட்டத் தரணியாக சட்ட மா அதிபர் திணைக் களத்தில் இணைந்து 30 வருடங்க ளுக்கும் அதிக காலம் கடமையாற்றி யுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட்டார்.

அவர் சட்ட மா அதிபர் திணைக்களத் தின் சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரலாக கடமையாற்றியதுடன், உயர் நீதிமன்றத்தில் தற்போது பணியாற்றும் சிரேஷ்ட நீதியரசருமாவார் என ஜனாதி பதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



# மலையக ரயில் சேவை வழமைக்கு திரும்பியது

ஹாலிஎல – உடுவர பகுதி யில் மண்மேடு சரிந்தமை யால் தடைப்பட்டிருந்த மலை யக மார்க்க ரயில் போக்கு வரத்து நேற்று முதல் வழமைக்கு திரும்பியுள்ளது.

மலையகத்திற்கான ரயில் மார்க்கத்தில் ஹாலிஎல – உடுவர பகுதியில் அண்மை யில் மண்சரிவு ஏற்பட்டது.

மேற்படி, ரயில் மார்க்கத் தில் சரிந்து வீழ்ந்த மண்மேடு நேற்று முன்தினம் முற்றாக அகற்றப்பட்டது.

நேற்று காலை முதல் மேற் படி ரயில் மார்க்கத்திலான ரயில் போக்குவரத்து வழ மைக்கு திரும்பியுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரி வித்துள்ளது.





# மகளிர், சிறுவர் விவகார அமைச்சர் மன்னாருக்கு நேற்று விஜயம்

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட், வாஸ் கூஞ்ஞ)**

மன்னாருக்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (01) விஜயம் மேற்கொண்ட மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல் ராஜ் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களுக்குச் சென்று பார்வையிட்டார்.

இதன்போது மகளிர் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மன்னார் மாவட்ட பதில் அரச அதிபர் சிறிஸ்கந்த குமார், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது எழுத்தூர் பாடசாலை, செல்வநகர் ஆலய மண்டபம் போன்ற இடங்களில் தங்கியிருந்த மக்களையும், குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களை பார்வையிட்டு அவர்களுக்கு உலர் உணவு பொதி களையும் வழங்கி வைத்தார்.




# குரங்கு பறித்த குரும்பை கழுத்தில் வீழ்ந்ததில் குடும்பஸ்தர் உயிரிழப்பு





குரங்கு பறித்த குரும்பை நபர் ஒருவரின் கழுத்தில் வீழ்ந்ததில், அந்த நபர் உயிரிழந்த சம்பவம் புலத்கொஹுபிட்டிய, மேல் நியூமீர், பிரிவு இலக்கம் 3 இல் இடம்பெற்றுள்ளது.

ஒரு பிள்ளையின் தந்தையான ஏ.ஜி. ஜயசேன என்பவரே உயிரிழந்துள்ளார்.

வீட்டுக்கு அருகே இருக்கும் தென்னை மரங்களில் இருந்து வீழ்ந்து கிடந்த தேங்காய்களை கடந்த 27ஆம் திகதியன்று பொறுக்கிக் கொண்டிருந்த போது, தென்னை மரத்தில் இருந்து குரும்பையைக் குரங்கு பிடிங்கியுள்ளது. அதன் போதே அந்தக் குரும்பை, மேற்படி நபரின் கழுத்துப் பகுதியில் வீழ்ந்துள்ளது.

அந்த நபர் உடனே கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அவர் அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 29ஆம் திகதி உயிரிழந்தார்.



## அலெப்போ நகரை கைப்பற்றிய கிளர்ச்சி படை:

# சிரியாவுக்கு ஆதரவாக ஈரான் களமிறங்குமா?

**சிரியாவுக்குள் திடீரென கிளர்ச்சியாளர்கள் தாக்குதலை நடத்தியதன் பின்புலத்தில் இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் உள்ளன என்றும், ஈரானைக் கட்டுக்குள் கொண்டு வரவே இத் தாக்குதல்கள் நடத்தப்படுவதாக கூறப்படுகிறது**

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

மத்திய கிழக்கு நாடுகளில் தொடர்ந்து போர் பதற்றம் அதிகரித்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் இஸ்ரேல் – காசா மோதலாகும். இந்த மோதல் தற்போது போராக மாறி உள்ளது. அதேபோல் இஸ்ரேல் – ஈரான் மற்றும் இஸ்ரேல் – லெபானின் ஹெஸ்புல்லா இடையேயும் மோதல் இன்னமும் நீடித்து வருகிறது.

புதிய போர் வெடித்துள்ளது

சிரியாவில் தற்போது புதிய போர் வெடித்துள்ளது. சிரியா அதிபர் பஷிர் அல் அசாத்தின் ஆட்சிக்கு எதிராக ஹயாத் தஹ்ரிர் அல் ஹாம் என்ற அமைப்பின் தலைமையில் கிளர்ச்சியாளர்கள் போரை தொடங்கி உள்ளனர்.

இந்த போர் சிரியா மட்டுமின்றி ஈரானுக்கும் சிக்கலை ஏற்படுத்தி உள்ளது. இதனால் ஈரான், சிரியாவுக்கு ஆதரவாக படைகளை இறக்கலாம் என்ற தகவலும் வெளியாகி உள்ளது.

சிரிய அரசாங்கம் 2016ம் ஆண்டு அலெப்போ (Aleppo) நகரத்தை கைப்பற்றிய பிறகு, மீண்டும் சிரிய கிளர்ச்சி படை அலெப்போ நகரத்தை கைப்பற்றியுள்ளனர்.

தற்போது ஹயாத் தஹ்ரிர் அல்–ஷாம் (Hay'at Tahrir al-Sham ) என்ற கிளர்ச்சி படை அலப்போ நகரை நோக்கி வேகமாக முன்னேறி வருவதாக தெரிவித்துள்ளனர். அத்துடன் கடந்த புதன் கிழமை (27.11 . 24)அதிர்ச்சித் தாக்குதலைத் தொடங்கியவர்கள், வழியில் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களை ஆக்கிரமித்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், ரஷ்ய ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் இராணுவ உபகரணங்களை உள்ளடக்கிய பாரிய கிடங்கை சிரிய கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர்.

### ரஷ்ய போர் விமான குண்டு வீச்சு!

அலெப்போ நகரை கைப்பற்றியதால் சிரியாவில் மீண்டும் உள்நாட்டு போர் வெடித்துள்ளது. இந்நிலையில் சிரியாவின் இட்லிப் (Idlib) மற்றும் சர்மடா (Sarmada) பகுதிகள் மீது ரஷ்ய போர் விமானங்கள் குண்டுகளை வீசியுள்ளன.

உள்ளூர் ஊடகத் தகவல் படி, ரஷ்ய வீரர்கள் வான்வழி தாக்குதல் மூலம் எரிவாயு நிலையத்தை தாக்கியதாக தெரிவித்துள்ளனர்.



2020 இல் வடமேற்கு சிரியாவில் இந்த பகுதியில் தீவிரமான சண்டை நிகழ்ந்தது. முன்பு எதிர்க்கட்சி போரா

தொடர்ச்சி ▼

# சிரியாவுக்கு ஆதரவாக ஈரான் களமிறங்குமா?

தொடர்ச்சி▲

ளிகளால் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளை அரச படைகள் கைப்பற்றியிருந்தனர்.

அத்துடன் துருக்கிய எல்லைக்கு அருகே கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள சிரியாவின் வடமேற்கு பகுதிகளை ரஷ்ய மற்றும் சிரிய போர் விமானங்கள் குண்டுவீசி தாக்கி உள்ளன.

### அசாத் எதிர்ப்பு கிளர்ச்சி படைகள்

சிரிய நாட்டின் வடமேற்கில் அரசாங்க கட்டுப்பாட்டில் உள்ள நிலைகள் மீது கிளர்ச்சிப் படைகள் தங்கள் தாக்குதலை அதிகரித்துள்ளன. கிளர்ச்சியாளர்கள் வெள்ளிக்கிழமை இரண்டு கார் குண்டுத் தாக்குதல்களை நடத்திய பின்னர் அலெப்போ நகரத்தின் மீது தரைவழித் தாக்குதலைத் தொடங்கினர்.

மேலும் நகரின் மேற்கு எல்லையில் அரச படைகளுடன் போர் தொடர்ந்து நடந்து வருகிறது. நகரத்தின் மீதான பெரும் தாக்குதலை முறியடித்ததாக சிரிய இராணுவம் தெரிவித்தது.

Hay'at Tahrir al-Sham ஆயுதக் குழுவின் தலைமையிலான கிளர்ச்சியாளர்கள் ஒரு தாக்குதலைத் தொடங்கி வடமேற்கு மாகாணமான அலெப்போவில் 47 இற்கும் மேற்பட்ட கிராமங்களின் கட்டுப்பாட்டை அவர்கள் கைப்பற்றியுள்ளனர் என்று எதிர்க்கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன. கிளர்ச்சியாளர்கள் எம் - 5 நெடுஞ்சாலையின் கட்டுப்பாட்டை எடுத்துக்கொண்டனர்.





### ஷபின்புலத்தில் இஸ்ரேல் - அமெரிக்கா

இந்த மோதல்களால் தற்போது ஈரானிலிருந்து சிரியாவுக்குள் ஆயுத தளபாடங்களைக் கொண்டு வருவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இந்த வழி ஊடாகவே ஆயுதங்கள் மாற்றப்பட்டு லெபனானில் உள்ள ஹிஸ்புல்லாவுக்கு ஈரான் ஆயுதங்களை வழங்குகின்றது.

சிரியாவுக்குள் திடீரென கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்களை நடத்த பின்புலத்தில் இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் இருக்கின்றன என்று கருதப்படுகிறது. ஈரானைக் கட்டுக்குள் கொண்டு வரவே இத்தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

தற்போது மத்திய கிழக்கு நாடுகளில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த பதற்றத்தை அதிகரிக்கும் வகையில் தான் தற்போது சிரியாவில் உள்நாட்டு போர் தொடங்கி உள்ளது.

இந்த உள்நாட்டு போர் என்பது சிரியா அதிபர் பஷர் அல் அசாத்துக்கு எதிராகத் தொடங்கி உள்ளது. அதாவது சிரியா அதிபராக பஷர் அல் அசாத் கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பதவி வகித்து வருகிறார். அவ்வப் போது அவருக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் சண்டையிட்டு வந்துள்ளனர்.

சிரிய உள்நாட்டுப் போர்

2011 இல் உள்நாட்டுப் போர் சிரியாவுல் தீவிரமாகியது. கிளர்ச்சியாளர்கள் அலெப்போ நகரை கைப்பற்றினர். அதன்பிறகு ஈரான், ரஷ்யா உதவியுடன் 2016 இல் அந்த நகரை அதிபர் பஷிர் அல் அசாத் கைப்பற்றினார். தற்போது அந்த நகரில் தான் மீண்டும் உள்நாட்டுப் போர் வெடித்துள்ளது.

இந்த முறையும் அதிபர் பஷிர் அல் அசாத்துக்கு எதிராக ஹயாத் தஹ்ரிர் அல் ஹாம் அமைப்பின் தலைமையில் அந்த நகரை கைப்பற்றி உள்ளனர். இந்த நகரில் தற்போது அதிபர் ஆதரவு படை மற்றும் கிளர்ச்சி படைகளுக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த மோதலில் தற்போது வரை வெளிநாடுகள் எதுவும் தலையிடவில்லை. ஏனென்றால் உள்நாட்டு போர் இப்போதுதான் தொடங்கியுள்ளது. விரைவில் வெளிநாடுகளின் தலையீடு என்பது இந்தப் போரில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சிரியாவுக்கு ஆதரவாக ஈரான் களமிறங்குமா?

சிரியா அதிபர் பஷிர் அல் அசாத்துக்கு ஆதரவாக ஈரான் அலெப்போ நகருக்கு படைகளை அனுப்ப வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. அந்த வகையில் முதலில் ஈரான் முதலில் களமிறங்கலாம் என்று சொல்லப்படுகிறது.

அதன்படி ஈரான் ஆதரவுடன் ஈராக்கில் செயற்பட்டு வரும் கதைப் ஹெஸ்புல்லா kata'ib hizballah, அசைப் அல் ஹக் (யுஎயடை யுாட யுட ர்யங), அன்சார் அல்லா அல் அஃபியா (Ansar Allah al - Awfiya) ஆயுத தாங்கி சண்டையிலும் படைகளை அனுப்ப வாய்ப்புள்ளது என்று கூறப்படுகிறது.

இந்த படைகளை சில நாடுகள் பயங்கவாத அமைப்பாக அறிவித்துள்ளன. விரைவில் இந்த படைகள் சிரியாவுக்குள் நுழைந்து அதிபர் பஷிர் அல் அசாத்துக்கு ஆதரவாக அலெப்போ நகரில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக போரிடலாம் என்று சொல்லப்படுகிறது.

### வெடித்த போரால் ஈரானுக்குச் சிக்கல்

சிரியாவில் வெடித்த போரால் ஈரானுக்கு பெரிய சிக்கல் எழுந்துள்ளது. அதாவது ஈரான் அதரவு பெற்ற ஹெஸ்புல்லா அமைப்பு லெபனான் நாட்டில் செயல்பட்டு வருகிறது.

இந்த அமைப்பு மூலம் தான் காசா போருக்குப் பழி தீர்க்கும் வகையில் இஸ்ரேலை, ஈரான் தாக்கி வருகிறது.

அதோடு இஸ்ரேலை தாக்குவதற்குத் தேவையான ஆயுத உதவிகள் உள்ளிட்டவை சிரியா வழியாகத் தான் ஹெஸ்புல்லாவுக்கு செல்கிறது.

தற்போது சிரியா உள்நாட்டு போரில் அதிபர் பஷிர் அல் அசாத் ஆட்சி கவிழும் பட்சத்தில் ஈரானால் ஹெஸ்புல்லாவுக்கு ஆயுத சப்ளை செய்வதில் சிரமம் ஏற்படும். இதனால் ஈரான் நிச்சயமாக சிரியாவுக்கு ஆதரவாக களமிறங்கும் என்று சொல்லப்படுகிறது.

# இன்றைய ராசி பலன்கள் - 03.12.2024




உங்கள் பொறுப்புகளை திறமையாக செயலாற்ற திட்டமிடுதல் அவசியம். பொறுமை காப்பது நல்ல பலனைத் தரும். விரைவாக முடிவெடுக்க முனைவீர்கள். இந்த உணர்வை கட்டுப்படுத்த வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் திறமையான முறையில் பணியாற்ற பணிகளை நன்கு கையாள வேண்டும். முன்கூட்டி திட்டமிட்டால் செயலில் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப் படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். மனம் திறந்த பேச்சும் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலமும் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இன்று பணம் குறைந்து காணப்படும். குடும்பத் திற்காக பணம் செலவு செய்ய நேரும். பணத்தை சேமிக்க இயலாது.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக் கும். இன்று எடுக்கும் சிறந்த முடிவுகள் வளர்ச்சி பெற உதவும். நீங்கள் உறுதி யுடனும் உற்சாகத்துடனும் காணப்படு வீர்கள்.

பணியில் வளர்ச்சி காணப்படும். சக பணியாளர்களிடம் நல்லுறவு பராமரிப்பீர்கள். உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையிடம் ஒளிவு மறைவின்றி பேசு வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். இன்று பாதுகாப்பாக இருக்க சேமிப்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்கள் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும்.




இன்றைய நாள் சாதகமான பலன் களை கொடுக்காது. விரும்பியவாறு பலன்களை அடைய சிறப்பாக திட்டமிட வேண்டும். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது கவனம் வேண்டும். வெற்றியை அடைவதற்கு திட்டமிடல் உதவும்.

உங்கள் துணையுடனான உறவில் சுமுகமான நிலை காணப்படாது. உங்களின் வேறுபட்ட நடவடிக்கைகள் உறவை பாதிக்கும்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் கலந்து காணப்படும். பணப் பரிவர்த்தனைகளுக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.




ஹஉங்கள் முயற்சிகளில் வெற்றி அடைய கடினமாக உழைக்க வேண்டும். அனைத்தையும் பொறுமையாக கையாள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணிச்சுமைகள் கவலையை அளி- க்கும். சக பணியாளர்களிடம் மோதல்கள் ஏற்படும் வாய்ப்புள்ளதால் கவனமாக உரையாட வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பு முறையில் பழகுவீர்கள். இம்மாதிரி அணுகுமுறையால் நீங்கள் நல்ல புரிந் துணர்வை பராமரிக்க முடியும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள். இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும். கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான பலன்கள் கிடைக் காது. உங்கள் தன்னம்பிக்கையை வளர்த் துக்கொள்ளுங்கள். அனுசரணை யான போக்கை மேற்கொள்ளுங்கள்.

இன்று பணிகள் கடினமாக காணப் படும். கூடுதல் பணிகள் காரணமாக அதிக நேரம் பணி செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் காணப்படாது. உங்கள் துணையுடன் சுமுகமாகப் பழகி னால் இந்த நாளை இனிமையாக ஆக்கலாம்.

இன்று பண வரவு காணப்படாது. பணப்பற்றாக்குறை காரணமாக கவலை ஏற்படும்.

கீழே விழுந்து அதனால் பாதங்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான நாள். வெற்றிகர மான பலன்கள் கிடைக்கும். உங்களின் நம்பிக்கை இன்று பலிக்கும். திட்டமிட்டு செயலாற்றுவது இன்று நல்லது.

பணிகள் இறுக்கமாக காணப்பட்டா லும் குறித்த நேரத்திற்குள் பணிகளை முடிப்பீர்கள். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். குடும்பத்தில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சியில் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் மிகுதியாகக் காணப்படும். ஆக்கபூர்வ மான காரியங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன் கள் கிடைக்கும். இன்று அதிர்ஷ்டம் காணப்படும். உங்களின் நம்பிக்கை யான போக்கு காரணமாக பயனுள்ள முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணியில் பலன்கள் கிடைப் பது உறுதி. உங்கள் நேர்மையான முயற்சி மேலதி காரிகளின் பாராட்டைப் பெறும். பணியில் உங்கள் செயல்திறனின் தரம் மேம்படும்.

உங்கள் அன்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இன்றைய நாளை ஒன்றாக இணைந்து கொண்டாடி திருப்தியடைவீர்கள்.

இன்று நிதிநிலைமை சாதகமாக உள்ளது. உங்கள் தேவைகளை சமாளிக்க சிறிய அளவில் கடன் வாங்கு வீர்கள்.

இன்று ஆற்றல் அதிகமாகக் காணப்படும்.




இன்று சாதகமான நாளாக அமை யாது. மனதை ஓய்வாகவும் அமைதி யாகவும் வைத்திருக்க வேண்டும். வளைந்து கொடுக்கும் அணுகு முறையும் புத்திசாலித்தனமும் தேவை.

பணியின் போது தவறு செய்ய வாய்ப்புள்ளது. கவனமாகப் பணியாற்றவும்.

உங்கள் துணையுடன் இன்று மோதல்கள் ஏற்பட லாம். தேவையற்ற விவாதங்கள் உண்டாக வாய்ப்புள்ளது. அதனை தவிர்த்தல் நலம்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும் போது கவனமாக இருக்க வேண்டும்.

இன்று சிறிது பதட்டமாக காணப்படுவீர்கள். பாது காப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக் கும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜபங்கள் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.12.2024




இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்காது. உங்கள் வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள். என்றாலும் உங்கள் பொறுப்பு மற்றும் அர்ப்பணிப்பு கொண்டு இன்றைய நாளை வெற்றி கரமாக ஆக்குவீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. ஆனால் இந்தப் பயணத்தில் சில விரும்பத்தகாத சூழ்நிலைகள் ஏற்படும் என்பதால் இனிமையான பயணமாக இருக்காது.

நீங்கள் உங்கள் துணையிடம் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் பழக வேண்டும். நல்ல உறவை பராமரிக்க சிறந்த அணுகுமுறை தேவை.

வரவும் செலவும் இணைந்து காணப்படுகின்றது. நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை அனுபவிக்க இயலாது.

இன்று மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள்.




உங்கள் முயற்சிகளில் வளர்ச்சி யும் வெற்றியும் காணப்படும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும் வகையில் இன்றைய நாள் சுமுகமாக இருக்கும்.

உங்களின் அருமையான செயல் திறன் மூலம் உங்களுக்கு வெகுமதியும் அங்கீகாரமும் கிடைக்கும். உங்களின் புத்திசாலித்தனம் மற்றும் சிறந்த செயல் மூலம் வெற்றிக்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பீர்கள். இதனால் அவருக்கு உங்கள் மீது நம்பிக்கை பெருகும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. இன்று உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

இன்று ஆற்றல் மிக்க மன நிலை காணப்படும். இது உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று லாபகரமான பலன்கள் கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுக்க உகந்த நாள். நீங்கள் சிறந்த தைரியத்துடன் காணப்படுவீர்கள்.

திறமையாகப் பணியாற்றி அதற் குரிய அங்கீகாரம் பெறுவீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாகப் பழகுவீர் கள். நீங்கள் உங்கள் துணையுடன் உல்லாசமாக பழக வேண்டும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்து வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். இன்று திடமாகவும் சௌகரியமாகவும் உணர்வீர்கள்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக் காது. எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாகவும் புத்துணர்ச்சியுடனும் இருக்க வேண்டும்.

பணிகளை பொறுமையான அணுகுமுறையோடு மேற்கொள்ள வேண்டும். பணிகள் பரபரப்பாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக் கும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். உங்கள் குடும்பத் தேவைகளுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் பதற்றமாக காணப்படுவீர்கள். தியானம் மூலம் நீங்கள் அமைதி பெறலாம்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94777 546 546 | +94770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park